இவ்வாக்கிரமணங்களை நில எடுப்புச்சட்டத்தின்படி, தேவையான வழிமுறைகளைப் பின்பற்றி, வருவாய்த்துறை அலுவலர்களும், மற்றும் வீட்டுவசதி வாரிய அலுவலர்களும் வெளியேற்றியுள்ளனர். செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் தனது அறிக்கையில், அத்துமீறல்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதையும். சேதமோ, இழப்போ, சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஏற்படவில்லை என்பதையும் தெரிவிக்கின்றார்.

(இ) சென்னை புறநகர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை வரைமுறை செய்யும்போது கிரயம் வசூலித்தல்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''தாம்பரம் மற்றும் புறநகர் பகுதிகளில் முப்பது ஆண்டுகளாக அரசு தரிசு நிலங்களிலுள்ள குடிசைப் பகுதி மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்குவதில் தற்போது உள்ள அரசின் கொள்கைப்படி 3 சென்டுக்கு மேல் உள்ள இடங்களுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1984-ம் ஆண்டு 30-6-1984 வரை உள்ள ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த அரசு உத்திரவிட்டது. செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் 30-6-1984 வரை 44,891 ஆக்கிரமணங்கள் உள்ளன. இவற்றில், 23,010 ஆக்கிரமணங்கள் 3 சென்டுக்கு மேல் உள்ளது. தற்போதுள்ள அரசு கொள்கைப்படி ஆக்கிரமிப்புதாரர்கள் ஏழைகளாக இருந்தால் 3 சென்ட் வரை இலவச மனைப் பட்டாவும் 3 சென்டுக்கு மேல் உள்ள கூடுதல் நிலங்களுக்கு சென்ட் ஒன்றுக்கு 2 மடங்கு நிலக்கிரயமும் செலுத்த வேண்டும். ஆக்கிரமிப்புதாரர்கள் பணக்காரர்களாக இருந்தால் மூன்று சென்ட் வரை 1 மடங்கு நிலக்கிரயமும், 3 சென்டுக்கு மேல் உள்ள கூடுதல் நிலங்களுக்கு 2 மடங்கிலிருந்து 4 மடங்கு வரை நிலக்கிரயமும் செலுத்த வேண்டும். இவ்விதம் நிர்ணயிக்கப்படும் தொகை சந்தை மதிப்பைவிட அதிகமாக உள்ளதென்றும், ஒப்படைதாரர்கள் மேற்படி நிலங்களுக்கு கிரயம் செலுத்தி பட்டா பெறுவதற்கு தயங்குகிறார்கள் என்றும், இதனால் சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 4.37 கோடியாக உள்ளது என்றும், அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகரின் புறநகர் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செயயும்போது எந்த அடிப்படையில் கூடுதல் நிலத்திற்கான கிரயத்தை வசூலிப்பது என்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நிலமற்ற ஏழை மக்கள் 30 ஆண்டுக் காலமாகத் தரிசு நிலங்களில் குடியிருந்து வருகிறார்கள். சமீபத்தில் சைதாப்பேட்டை வட்டத்தில் மட்டும் 44,891 ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. இவர்களுக்கு ரூ. 3,500 ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு 3 சென்ட் வரை இனாமாகவும், ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்கு மேற்பட்டவர்களுக்கு மார்க்கெட் நிலவரப்படி 3 சென்டுக்கு 14,000 ரூபாயும், 3 சென்டிலிருந்து 5 சென்ட் வரை உள்ள மனைதாரர்களுக்கு இரண்டு மடங்கு நிலக் கிரயமும், 5 சென்டிலிருந்து 8 சென்ட் வரை உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு 3 மடங்கு நிலக் கிரயமும் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னெடுங்காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. கிட்டத்தட்ட புறநகர் பகுதியில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள், குடிசைவாழ் மக்கள் அல்லல்படுகிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் குறைந்தபட்சம் அந்த மக்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். 1980-வது வருடத்தில் விலை நிர்ணயம் செய்து நோட்டீஸ் கொடுத்தார்கள். அதற்குப் பின்பு அந்த நிலக் கிரையத்திற்கு இன்றுவரை வட்டி, அபராத வட்டி, கூட்டு வட்டி போட்டு இப்போது கட்டச் சொல்கிறார்கள். குறைந்தபட்சம் இந்த வட்டிகளைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், சைதாபேட்டை வட்டத்தைப் பொறுத்து 30–6–1986 வரை 44,891 ஆக்கிரமிப்புகள் உள்ளன. இவற்றில் 23,010 ஆக்கிரமிப்புகளில் 3 சென்ட்டுக்கு மேல் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இந்த 3 சென்ட்டுக்கு உள்ளாக இருந்து, ஏழை எளியவர்களாக இருந்து வேறு வீட்டு மனைப்பட்டா ஏதும் இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு இலவசம் என்று வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் இருப்பவர்களுக்கு, 3 சென்ட்டுகளுக்கு மேல் 5 சென்ட்டுகள் வரை இருந்து ஏழைகளாக இருந்தால் ஒரு மடங்கு கிரயம் என்றும், 5 சென்ட்டுகள் முதல் 10 சென்ட்டுவரை இருப்பவர்களுக்கு 2 மடங்கு கிரயம் என்றும் சில வரைமுறைகள் வகுத்து இருக்கின்றார்கள்.

வசதி படைத்தவர்களாக இருந்தால், அதற்கு என்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்தது போல, சிலபல வரைமுறைகள் வைத்திருக்கின்றார்கள். இவர்கள் அத்தனை பேர்களும் செலுத்த வேண்டியது ரூ. 4,37,21,611.15 காசுகளாக இருக்கின்றது. ஆனால் இவர்கள் கட்டாத

சூழ்நிலையில் இருந்துவருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்பட முடியாத சூழ்நிலையும் இருந்து வருகிறது. ஆகவே ஆக்கிரமிப்புகள் யாவற்றையும் குறுகிய காலத்தில் வரன்முறைப் படுத்த வேண்டும் என்றால் பட்டா வழங்கப்பட வேண்டும். அதை வழங்குவது என்றால், அதற்கான கிரையத்தை அவர்கள் வழங்க வேண்டும். அல்லது அந்த விதிமுறைகளை நாம் மாற்ற வேண்டும். ஆக விதிமுறைகள் என்பது மாநிலம் முழுமையும் ஒரே தன்மையாக இருப்பதைத் தவிர இடத்திற்கு இடம் நாம் மாற்றுவதற்கில்லை. இது வசூலிக்கப்படுவதற்குப் பதிலாக வேறு மாற்றுத் திட்டத் திற்கான செயல் குறிப்பு பற்றி நாம் இப்போது ஆலோசிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஏழை எளியவர்களாக இருந்தால் அவர்கள் விஷயத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவு மடங்கு நிலம் கிரையத்தைப் பெறுவது என்பது பற்றி நாம் புதிதாக ஒரு திட்டம் வகுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(ஈ). கூட்டுறவுச் சங்க சிறப்பு அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சுந்தர தாஸ், கே. கிருஷ்ணமூர்த்தி, எஸ். இராசாராமன், மூ. இராசாங்கம், டாக்டர் ந. மாசிலாமணி, என். எஸ். வி. சித்தன், க. சோலைராசு, செ. செம்மலை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகம் முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களில் நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1974 முதல், ஒவ்வொரு ஆண்டும், கூட்டுறவுத் துறையில், தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இளநிலை ஆய்வாளர்களில் பலர், தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டு வந்தனர். தற் காலிகப் பணிகளை, வரன்முறை செய்ய, விதிகளில் இடமில்லை. சென்னை, உயர்நீதிமன்றத்தில், ரிட் மனு தொடுத்தனர். ரிட் மனு (804/83) தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும்,